சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நீரைத் தேக்கி வைப்பதற்கு, ஒரு பெரிய அணை போல கட்டி நீரைத் தேக்கி, மற்ற கால்வாய்களுக்கு விடுவதற்கு ஒரு திட்டத்தை அமைப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வாலாஜா அணைக்கட்டு பற்றி தெரியும். ஆனால் அதன் முழு நிலைமை எனக்குத் தெரியாது. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

பயணியர் விடுதிகள்

*** 579 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னதாராபுரம் பயணியர் விடுதி பழுதுபட்டிருப்பதைச் சீர்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சின்ன தாராபுரத்திலுள்ள பயணியர் விடுதியைப் பழுது பார்த்துச் செப்பனிடுவதற்காக ரூ. 3,950-க்கு புதுக்கோட்டை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை துறை) அனுமதி வழங்கியிருக்கிறார். நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, இவ்வேலை இவ்வாண்டிலேயே நடைபெறும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சின்ன தாராபுரத்தில் உள்ள பயணியர் விடுதி மிகப் பெரிய பல அறைகளைக் கொண்டது. பல அறைகள் பழுதுபட்டிருக்கின்றன. ரூ. 3,000 அளவில் ஒன்றும் பழுது பார்க்க முடியாது. ரூ. 30,000 அளவுக்குத் தேவைப்படும். அந்த வட்டாரத்தில் வேறு பயணியர் விடுதி இல்லை. அது ஒரு நல்ல இடம், நல்ல கட்டடம். அதைச் சரிவர பழுதுபார்த்து பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றிய முழு விவரமும் என்னிடத்தில் இல்லை. கோட்டப் பொறியாளர் ரூ. 3,950-க்கு ஒரு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியதாக என்னிடம் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு என்னிடம் தகவல் இல்லை.